## ஆம்பூர் நகரம்

**அமைப்பாளர் :** மு.சரண்ராஜ், 32/18–ஏ, வளையல்க்காரர் தெரு, ஆம்பூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.சத்யராஜ், 12, இந்திரா நகர், 3–வது தெரு, எஸ்.கே.ரோடு, ஆம்பூர். (2) அ.கோபி, 30, ஏரிக்கரை தெரு, கெங்காபுரம், ஆம்பூர். (3) ர.அரவிந்தன், 6, 2–வது தெரு, 3–வது தார்வழி, ஆம்பூர். (4) யூ.முபாரக் பாஷா, 35/19, 4–வது தெரு, கே.எம். நகர், புதுமனை, ஆம்பூர். (5) ச.கௌதம், 20/2, புதுத் தெரு, சான்றோர்குப்பம், ஆம்பூர். (6) செ.வெங்கடேசன், 7/4, குமரேசன் தெரு, கஸ்பா–பி, ஆம்பூர். (7) சி.நபீஸ் அஹமத், 6, சுண்ணாம்புக்காரர் தெரு, 4–வது சந்து, ஆம்பூர்.

## ஆலங்காயம் பேரூர்

**அமைப்பாளர் :** த.சீனிவாசன், 32, பாமாண்டி சின்னபையன் தெரு, ஆலங்காயம், திருப்பத்தூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.கணேஷ், 18, ராஜாபாளையம், ஆலங்காயம், திருப்பத்தூர். (2) சீ.தண்டபாணி, 18, மதனப்பள்ளியான் தெரு, படக்குப்பம், ஆலங்காயம் (அ), திருப்பத்தூர். (3) சே.சாந்தகுமார், 14, காமராஜர் தெரு, ஆலங்காயம், பெத்தூர், திருப்பத்தூர். (4) த.சந்துரு, 25, ரெட்டியார் தெரு, பெத்தூர், ஆலங்காயம்.

## உதயேந்திரம் பேரூர்

**அமைப்பாளர் :** கே.சத்தியமூர்த்தி, 17/31, காந்தி ரோடு, உதயேந்திரம், வாணியம்பாடி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.சிலம்பரசன், 17, புதுத் தெரு காலனி, ஜாப்ராபாத் (அ), மேட்டுப்பாளையம், வாணியம்பாடி. (2) ர.மதன்குமார், 9, பாரதிதாசன் தெரு, உதயேந்திரம், வாணியம்பாடி. (3) ரா.அருண், 5, சுப்புராயன் கோயில் தெரு, உதயேந்திரம், வாணியம்பாடி. (4) சா.வினோத்குமார், 11/10, தொப்பசாமி தெரு, சி.வி.பட்டறை, உதயேந்திரம், வாணியம்பாடி, திருப்பத்தூர்.

## நாட்றம்பள்ளி பேரூர்

**அமைப்பாளர் :** (1) சூ.ஸ்ரீகீர்த்திராஜன், 5, ரங்கசாமி தெரு, நாட்றம்பள்ளி (அ), திருப்பத்தூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.அகிலன், 155/2 ஆர்.சி.எஸ். பிரதான சாலை, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர். (2) ஜெ.வெங்கடேசன், 58, தாயப்பர் தெரு, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர். (3) மு.ஆனந்தன், தாயப்பர் தெரு, நாட்றம்பள்ளி.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 30–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மெட்ராஸ் ENT ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அவர்களின் 70 – வது பிறந்தநாளையொட்டி நேற்று முன்தினம் (30.1.2025) சென்னை, அடையாறில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.



ஈரோடு தெற்கு மாவட்டம் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்திலிருந்து விலகி மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் திருநாவுக்கரசு தலைமையில் மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான சு.முத்துசாமி முன்னிலையில் 50 பேருக்கும் மேற்பட்டவர்கள் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் ஈரோடு கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார், கொல்லம்பாளையம் பகுதி கழக செயலாளர் லட்சுமண குமார், தலைமைக் கழக பேச்சாளர் ஈரோடு ப.இளைய கோபால், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் இமயம் சிவக்குமார், துணை அமைப்பாளர் டி.சுப்ரமணியம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### நீலகிரி மாவட்ட ஜென்மம் எஸ்டேட் சட்டப்பிரிவு 17 நிலங்கள் தொடர்பான

# நீதிமன்ற வழக்குகள் - நிலவரி திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!

சென்னை, பிப். 1-

நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் நிலஉடைமை முறை குறித்து வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு 1969 ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தில் பிரிவு 17 நிலங்களில் வசிக்கும் மக்களின் அடிப்படை வசதிகள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் நிலவரித் திட்ட பணிகள் குறித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.01.2025) நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் நிலஉடைமை முறை குறித்து வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு 1969-ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தில் பிரிவு 17 நிலங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகள் மற்றும் நிலவரித் திட்ட பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு 1969 ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தின் அடிப்படையில் குத்தகை காலம் முடிந்த 34,986.28 ஏக்கர் நிலங்களை மீட்கும் நடவடிக்கையை தொடரவும், மேற்கண்ட சட்டப்பிரிவு 17 நிலங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் வசதிகளை நிறைவேற்றும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், கூடலூர் ஜென்மம் நிலங்களில் தகுதியான குடியிருப்பு பகுதிகளுக்கு அடிப்படை தேவைகளை நிறைவேற்றிட உள்ள தடையாணையை நீக்கும் பொருட்டு உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்யவும், நீதிப் பேராணை மனு எண். 202/1995இல் விவாதிக்கப்படும் வனப்பிரச்சனைகளிலிருந்து தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் நிலங்கள் சட்டம் 1969இன் கீழ் வரும் வழக்குகளை பிரித்து தனியாக விசாரணை செய்ய உச்சநீதி மன்றத்தில் உரிய அனுமதி பெறுவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சுற்றுசூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், சட்டத்துறை செயலாளர் சி. ஜார்ஜ் அலெக்சாண்டர், நில நிருவாக ஆணையர் மருத்துவர் கே.சு.பழனிச்சாமி, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப.மதுசூதன்ரெட்டி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்கள்

# புள்ளமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி கட்டிடம் ,நெல்கொள்முதல் நிலையம்!

## பூண்டி கே.கலைவாணன் – ஐ.வி.குமரேசன் திறந்துவைத்தனர்!

*திருவாரூர், பிப். 1 -*

*திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்களின்படி, திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி கிழக்கு ஒன்றியத்தில் பல்வேறு பகுதிகளில் முடிவடைந்த வளர்ச்சி பணிகளுக்கான கட்டிடங்களை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே. கலைவாணன் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்*


*மன்னை கிழக்கு ஒன்றியம் வடபாதிமங்கலம், புள்ளமங்கலம், பாலக்குறிச்சி ஊராட்சி திருநாட்டியத்தாங்குடி, சித்திரையூர் ஆகிய பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் தலா 6 லட்சம் மதிப்பீட்டிலான பேருந்து பயணிகள் நிழற்குடைகளையும் , ராஜாங்கட்டளையில் 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நேரடி நெல்கொள்முதல் நிலையத்தையும் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் திறந்து வைத்தார்.*

*மேலும் புள்ளமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பொதுமக்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கோரிக்கையின்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் தொகுதி மேம்பாட்டு நிதியில் 10 லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கத்தையும், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கருணாகரன் நிதியில் 7.40 லட்சம் மதிப்பீட்டிலான கழிவறை கட்டிடத்தையும், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சௌந்தரராஜன் மற்றும் தலைமை ஆசிரியர் தசரதன் ஆகியோர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் திறந்து வைத்தார்.*

*இந்த நிகழ்ச்சிகளில் ஒன்றிய செயலாளர் ஐ.வீ.குமரேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வம் ஒன்றிய அவைத்தலைவர் சுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதி சித்தரஞ்சன், ஒன்றிய துணை செயலாளர் ரமேஷ், ஒன்றிய இளைஞரணி செயலாளர் பிரகாஷ் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி. வெ .கணேசன் அறிக்கை!



*கடலூர், பிப். 1 -*

*கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க இளைஞர்அணிக்கு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் பிப். 9 அன்று நடைபெறுகிறது.*

*கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுறுத்தல்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணிக்கு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம். வருகின்ற 09.02.2025, ஞாயிற்றுக்கிழமை, மாலை 3.00 மணி அளவில், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.*

*அது சமயம் இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுகுழு, உறுப்பினர்கள் , ஒன்றிய கழக , நகரகழக, பேரூர்கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,*

*துணை அமைப்பாளர்கள் மற்றும் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர , பேரூர், கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.*

### 56 வது நினைவு நாள்:

# கரூரில் - பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வேண்டுகோள்!



*கரூர், பிப்.1 -*

*பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கரூரில் அமைதி ஊர்வலம், அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியில் கழகத்தினர் திரளாக பங்கேற்குமாறு கரூர் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்*

*கரூர் மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*காஞ்சி தந்த காவிய தலைவர். உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, வன்முறை தவிர்த்து வறுமை வெல்வோம்.*

*இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம், மத்தியில் சுயாட்சி மாநிலத்தில் கூட்டாட்சி எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 56 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு*

*வருகின்ற 3.2. 2025 திங்கள்கிழமை காலை 9 மணியளவில் கரூர் தி.மு.க அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு சென்று கரூர் பேருந்து நிலைய ரவுண்டானா பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள்,*

*மாநகர பகுதி, நகர ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.*



குன்னூர் காட்டேரி பகுதியில் ஏற்பட்ட பேருந்து விபத்தில் காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பயணிகளை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் குன்னூர் லாலி அரசு மருத்துவமனையில் நேரில் சென்று அவர்களுக்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளை குறித்தும் அவர்களின் உடல்நிலை குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்து பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு ஆறுதல் கூறினார். மேலும் அரசுக் கொறடா தொலைபேசி வாயிலாக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை தொடர்பு கொண்டு குன்னூர் லாலி அரசு மருத்துவமனைக்கு அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்கள் நியமிக்க கேட்டுக்கொண்டார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (30.01.2025) சட்டமன்ற பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டியை ஜப்பான் நாட்டின் கனகவா மாகாண பேரவை துணைத் தலைவர் கொண்டோ டைசுகி தலைமையிலான குழுவினர் சந்தித்தனர். இந்நிகழ்வின் போது சட்டமன்ற பேரவை முதன்மைச் செயலாளர் கி.சீனிவாசன் உடனிருந்தார்.